# சங்க இலக்கியத்தில் பொருளாதார வாழ்வியல்

**கோ.நிர்மலா**
**விஜய் வித்யாலையா கல்லூரி,**
**தருமபுரி.**

18

**ஆய்வியல் நோக்கம்**

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி நன்றாக இருந்தால்தான் அந்த நாடு சிறப்புற்று விளங்கும். அதுபோல சங்க காலத்தில் பொருளாதாரம் எப்படி இருந்தது என்பதை எடுத்துக்காட்டி வாணிபம் சிறந்து விளங்கியதையும் அதன் மூலமாக மக்கள் எவ்வாறு பயனடைந்தார்கள் என்பதை பத்துப்பாட்டு எட்டுத்தொகை நூல்களின் வாயிலாக எடுத்துக் கூறுவதே இந்த கட்டுரையின் நோக்கமாகும்.

**முன்னுரை**

நாடோடி வாழ்க்கை வாழ்ந்த மனிதன் முதலில் தன் அடிப்படைத் தேவையான உணவினை பெறக்கற்றுக் கொண்டான். பின்னர் விலங்குகள், இருள், குளிர் வெயில், இயற்கைச் சீற்றங்ளுளக்கு அஞ்சி உடை மற்றும் இருப்பிடத்தை அமைத்துக் கொண்டான். இவ்வாறு சிறிது சிறிதாக நாகரிகம் அமைந்த மனிதன் தனது அடிப்படைத் தேவைகள் நிறைவேறியதோடு தன் காலத்தை வீணாக கழிக்க விரும்பவில்லை. தொடர்ந்து பலபுதியக் கண்டுபிடிப்புகளிலும், கலை பெருக்கத்திலும் தன் கவனத்தை நிலை நிறுத்தினான். இவ்வாறாக வேளாண்மை, தொழில் நுட்பம், கட்டக் கலை முதலியவற்றில் வளர்ச்சி அடைந்தான். வேளாண்மையிலும், நெசவுத் தொழில், தச்சுத்தொழில், கொல்லுத் தொழில், மட்பாண்டத் தொழில் முதலானப் பல்வேறு தொழிகளில் வளர்ச்சியடைந்த மனிதன், தன் தேவைக்கு அதிகமாக கிடைத்தப் பொருட்களை, தேவைப்படுபவர்களுக்கு கொடுத்து அவர்களிடம் உள்ள தேவைக்கு அதிகமானப் பொருட்களைப் பெற ஆரம்பித்தான். இம்முறை “பண்டமாற்று” எனப்படும். எனவே மனிதனின் முதல் வணிகம் இம்முறையாகக் கொள்ளலாம்.

**பண்டமாற்றுமுறை**

தன் பண்டத்தினைப் பிறர் பண்டம் கொள்ளும் பொருட்மாற்றிக் கொள்ளுதலே பண்டமாற்று ஆகும்.

தேனெய் யோடு கிழங்கு மாறியோர்
மீனெய் யொடு நலவு மறுகவும்
தீங்கரும் போ டவல் வகுத்தோர்
மான் குறையோடு மது மறுகவும் - 1
(பட்டினப்பாலை 2147-17)

"பல்வேறு திருமனி முத்தமொடு பொன்கொண்டு
சிறந்த தேஎத்துப் பண்ணியம் பகார் நரும்" - 2
(மதுரை 505-06)

என்ற பதிவுகளில் மூலம் தேன், கிழங்கிற்கு மாற்றாக மீன் நெய் நறவை பெற்றும், அவலிற்கும் கரும்பிற்கும் மாற்றாக மான் தசையையும், கள்ளையும் பெற்றனர் என்பதை அறியலாம். மேலும் அயல்நாட்டு பண்டங்கள விற்கும் வணிகர்களின் பண்டங்களுக்கு மாற்றாக அழகான மணிகளையும், முத்துக்களையும் பொன்னையும் வழங்கினர் என்பதனை அறியலாம்.

**விலை நிர்ணயம்**

பண்டமாற்று முறைப் பழந்தமிழகத்தில் இருந்ததினை இலக்கியச் சான்றுகள் மூலம் அறியலாம். இம்முறையை நீண்ட காலம் பயன்படுத்திய மனிதன் மிக எளிமையாக கிடைக்கக் கூடிய பொருட்களுக்கு ஒரு மதிப்பீடும், அரிதாக கிடைக்கக் கூடிய பொருட்களுக்கு ஒரு மதிப்பீடும் இருப்பதை உணர்ந்து பொருட்களுக்கு ஏற்றார் போன்ற ஒரு பொதுவான விலை மதிப்பினை நிர்ணயத்திருக்கக் கூடும் என்பதாகக் கொள்ளலாம். இவ்வாறாக வாணிபத்தில் படிப்படியான முன்னேற்றத்தினை அடைந்தான்.

**இருவகை வாணிகம்**

பழங்காலத்தில் இருவகையான வாணிகங்கள் நிகழ்த்தினர்.

அவை

அ) உள்நாட்டு வாணிகம் (அல்லது) நில வணிகம்
ஆ) வெளிநாட்டு வாணிகம் (அல்லது) கடல் வணிகம்

பழங்காலத்தவர் அக்காலத்து இடம், பொருள், ஏவல்களுக்கும் சூழ்நிலைகளுக்கும் தக்கபடித் தரை வாணிகத்தையும் கடல் வாணிகத்தையும் நடத்தினார்கள். அவர்கள் கூட்டாகச் சேர்ந்து "சாத்து" அமைத்துப் பெரிய வாணிகத்தை நடத்தினார்கள். தரை வாணிகச் செய்த வாணிகத் தலைவர்கள் மாசாத்துவர் என்று பெயர் பெற்றனர்.

கடல் வாணிகச் செய்த வாணிகத் தலைவர்கள் மாநாய்கர் (மாநாலிகர்) என்று பெயர் கூறப்பட்டனர். (மயிலை சினிவேங்கடசாமி, பழங்காலத் தமிழர் வாணிகம் ப.1)

உள்நாட்டு வாணிகம்

உள்நாடு வணிகம் முதல் முதலில் பண்டமாற்று என்ற முறையிலேலேய வளர்ச்சி அடைந்ததாகக் கொள்ளலாம். இவ்வாணிகதிற்காக பல்வகை சகடங்களும், விலங்குகளும் பயன்படுத்தப்பட்டன

"பொடுஞ்சுட் டருந்திய திருந்துநிலை யாரத்து
முடுவின உன்ன முடுமர உருளி
எமுஉப் புணர்ந்தன்ன பருடக்கை நோன்பார்
மாரிக் குன்றம் மழை சுமந்தன்ன
ஆரை வேய்ந்த அறைவாயிச் சகடம்" - 3

(பெரும்பாண் 46-50)

என்ற பாடலின் மூலம் உமணர் சகடம் எத்தகைய உறுதியினைப் பெற்று இருந்நத்து என்பதனை அறியலாம்.

**வெளிநாட்டு வாணிகம்**

“தென் இந்தியாவிற்கும் மேற்கு ஆசியாவிற்கும் குறைந்தது கி.மு.ஆறாம் நூற்றாண்டிலிருந்தாவது வாணிகம் நடந்திருக்க வேண்டுமெனக் கொள்ளலாம்”

“ஐரோப்பாவோடு தென் இந்தியா ஏறத்தாழ கி.மு.500 முதல் வாணிகம் தொடங்கியது” (பிள்ளை கே.கே.தென் இந்திய வரலாறு -28)

“மேலை நாடுகளோடு கி.மு.7 ஆம் நூற்றாண்டில் இருந்து வாணிகம் தொடர்ந்து நடைபெற்று வந்தது” (அ.தட்சிணாமுர்த்தி, தமிழர் நாகரிகமும் பண்பாடும் ப-97) - 4

மேலும் குறிப்புகள் மூலம் கடல் வாணிகம் சிறப்புற்று இருந்தது இதன் மூலம் பொருளாதாரம் சிறப்பாக அமைந்துள்ளன என்பது நன்கு அறியமுடிகிறது.

**அங்காடிகள்**

பகல் பொழுதில் நடைபெறும் அங்காடிகள் நாளங்காடிகள் என்றும் இரவுப் பொருதில் நடைபெறும் அங்காடிகள் அல்லங்காட்டிகள் எனப்பட்டன. இக்கடைகளில் உள்ள பொருட்களை அறிவிக்கும் பொருட்டு பகலில் பலக்கொடிகள் சுட்டப்பட்டிருந்தன இரவில் கொடிகளுக்கு பதில் வண்ண விளக்குகள் இருந்ததாக அ.தட்சிணாமூர்த்தி கூறியுள்ளார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்த பொருட்களும் வெளிநாடுகளில் இருந்த வந்த பொருட்களையும் ஒரே இடத்தில் தேவைக்கு ஏற்றவாறு எளிமையாக மக்களை அடைய அங்காடிகள் பயன்பட்டன. மதுரைச் காஞ்சியில் இவ்வங்காடிகள் பற்றின குறிப்புகளைக் காணலாம். பெரிய நகரிகளின் அங்காடிகள் நிறைந்து காணப்பட்டன.

"யாறுகிடந் தன்ன அகனெருத் தெருவிற்
பல்வேறு குழாஅத் திரையெருந் தொளப்ப
மாகா லெருத்த முந்நிர் போல.
முழங்கிசை நன்பனை அறைவளர் நுவலக்
கயங்குடைந் தன்ன இயந்தொட்டிடிழிசை
மகிழ்ந்தோ ராடுங் கலிகாள் கம்மை
ஒவுக்கண்டன்ன இருபெரு நியமத்துச் (மதுரை 354-365) - 5

இப்பாடலில் அக்கால அங்காடித் தெருவினை கண்முன்னே படம் பிடித்துக் காட்டுகிறது.

**துறைமுகங்கள்**

பொருளாதாரம் சிறக்க துறைமுகப்பட்டினங்கள் சிறந்து விளங்கின. புதுச்சேரியில் ரோமக் குடியிருப்புகள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இருந்ததாக அறிகிறோம். கி.மு. 6 ஆம் நூற்றாண்டு முதல் தொடர்ந்து நடைபெற்ற உரோம் யவன வாணிகம்

கி.மு.முதலாம் நூற்றாண்டில் உச்ச நிலை அடைந்தது.

(கா.அப்பாதுரை, தென்னாடு ப-63)

கடற்கரை ஓரத்தே துறைமுகங்கள் இருந்தன. அக்காலத்தே பலத்துறை முகப் பட்டினங்கள் இருந்தன. காவிரிப் பூம்பட்டினம், எயற்பட்டினம் முதலியனவைகளில் ஏற்றுமதியும், இறக்குமதியும் தொடர்ந்து நிகழ்ந்தவாறு இருப்பதினை பட்டினப்பாலை பதிவின் மூலம் அறியலாம்.

"நீரினின்று நிலத்தேற்றவும்
நிலத்தினின்று நீர்ப்பரப்பவும்
அளந்தறியாப் பலபண்டம்
வரம்பறியாமை வந்திண்டி" . 6

(பட்டினப்பாலை 129-132)

சங்க இலக்கியத்தில் வாணிபம் சிறப்புற்று இருந்தன என்றும் கடல் வணிகம் நன்று அமைந்திருந்தன.

**வணிகப்பொருட்கள்**

தமிழகத்தின் முத்து. பவளம், மிளகு, அகில், சந்தனம், சங்கு, குரங்கு, மயில் முதலான பொருட்களும், விலங்களும் ஏற்றுமதி செய்யபட்டன. புரவிகள், மதுவகைகள், பொன், பாவை, விளக்குகள் முதலானவைகள் இறக்குமதி செய்யப்பட்டன.

**சுங்கம்**

இக்காலத்திலிருப்பதைப் போலவே பண்டைக் காலத்திலும் இறக்குமதி பொருட்களுக்கும் ஏற்றுமதிப் பண்டங்களுக்கும் அரசாங்கம் வரி விதித்து வந்தது அவ்வரிக்கு உல்கு, சுங்கம் என்ற பெயர்கள் வழங்கின. இவ்வரிகள் மூலம் பெறப்பட்ட பெருட்கள் மன்னனுக்கும் சொந்தமாகும்.

"அளந்தறியாப் பல பண்டம்
வரம்பறியானை வந்தீண்டி
அருக்கடிப் பெரும்காப்பின்" - 7

(பட்டினப்பாலை 131-133)

என்ற பொருட்களுக்கு விதிக்கப்பட்ட வரியினை அறியலாம்.

மேலும் பட்டினங்கலில் வந்திறங்கியப் பொருட்களுக்கு சுங்கம் செலுத்தப்பட்டதின் பேரில் சோழனின் புலி முத்திரை அதன் மேல் பொறிக்கப் பட்டதினை, கீழ்வரும் பாடல் மூலம் அறியலாம்.

"வலியி வல் அணங்கினோன்
புலி பொறித்தப் புறம் போக்கி " - 8

(பட்டினப்பாலை 134-135)

**வணிகர்களின் நேர்மை**

உள்நாட்டு வாணிகமானாலும், வெளி நாட்டு வாணிகமானாலும் வணிகர்கள் மிருந்த நேர்மையுடன் நடத்துக் கொண்டதனை இலக்கியச் சான்றுகள் உறுதிசெய்கின்றன.

“நெடுநுகத்துப் பகல்போல
நடுநின்ற நன்னெஞ்சினோர்
வடுவஞ்சி வாய் மொழிந்து

தமவும் பிறவும் ஒப்ப நாடிக்
கொள்வதூஉம் மிகை கொளாது
கொடுப்பதூஉம் குறை கொடாது
பலபண்டம் பகர்ந்து வீசும்

தொல் கொண்டித் துவன்றிருக்கை” - 9

(பட்டினப்பாலை 129-132)

வணிகர்கள் சங்க காலத்தில் நேர்மையுடன் இருந்தார்கள் என்பதை பட்டினப்பாலை மூலம் அறியமுடிகிறது.

**பொருளாதாரமும் வணிகமும்**

உழவு வணிகமும் உலகத்துக் தொழில்களில் சிறந்த தொழில்களாகப் போற்றுவதற்குரியன என்று மாங்குடி மருதனார் தமது நூலாகிய மதுரைக் காஞ்சியில் குறிப்பிடுகின்றார். இதனை

“லியல் மேவல் விழும் செல்வத்து

இரு வகையான், இசை சான்ற
சிறுகுடிப் பெருந்தொழுவர்

குடி கெழீஇய நால் நிலவ” – 10
பத்துப்பாட்டு மதுரைக்காஞ்சி

என்பதன் மூலம் அறியலாம். இதில் உலகத்துத் தொழில்களில் மேலாக சொல்லப்படும் உழவு, வாணிகம் என்னும் இரு பகுதிகளால் அகன்று பொருந்திய, சீரிய செல்வம் பெற்று, அச்செல்வத்தால் புகழ் நிறைந்த குடிமக்கள், நானிலத்திலும் வாழ்ந்தனர் என்பதனை அறியலாம். வணிகம் சிறந்திருந்ததனால் பொருளாதாரம் சிறப்புற்று இருந்தது.

**விருந்தோம்பல் ஈகைப்பண்பு**

விருந்து என்றால் புதுமை, புதியவர் என்று பொருள். விருந்தேபுதுமை என்பர் தொல்காப்பியர். இன்றைக்கு விருந்தினர் என்று உற்றார், உறவினர், நண்பர்கள் போன்றோரை கூறுகிறோம். ஆனால் பண்டை காலத்தில் முன்பே அறியாதவர்களாய் வீடு தேடி வருவோராயினம் விருந்தினர் எனப் பெற்றனர். தமிழர்கள் அவர்களை அகமும், முகமும் மலர வரவேற்று விருந்தோம்பினர். விருந்தினரை முகம் மலர்ச்சியோடு உபசரித்தால் தான் விருந்து சிறக்கும். இதனையே திருவள்ளுவர்

"மோப்பக்குழையும் அண்ணிச்சம் முகம் திரிந்து

நேக்கக் குழையும் விருந்து" - 11 (குறள்-90)

என்ற குரல் மூலம் எடுத்துக்காட்டுகிறார்.

விருந்தினர் ஒருநாள் இரண்டு நாட்கள் அல்வது பலநாட்கள் தொடர்ந்து பலரோடு சென்றாலும் முதல் நாள் எப்படி அன்போடும் ஆர்வத்தோடு இனிது வரவேற்றனரோ அதே போல் ஒவ்வொரு நாளும் விருப்புடன் வரவேற்கும் பண்பினன் அதியமான் நெடுமான் அஞ்சி என்பதை

"ஒரு நாட் செல்லம் இருநட் செல்லம்
பலநாள் பயின்று பலரோடு செல்லினும்
தலை நாள் போன்ற விரும்பினன் மாதோ" - 12

என்ற ஔவையாரின் பாடல் உணர்த்துகிறது. (புறம்-101)

**முடிவுரை**

சங்க காலத்தில் பொருளாதாரம் சிறந்து விளங்கின காரணத்தினால் வணிகம், விருந்தோம்பல், ஈகைபண்பு சிறந்து விளங்கின. செல்வம் பெருகிய காரணத்தினால் துறைமுக பட்டினங்களும் வாணிகம் சிறந்து விளங்கின. இவ்வாறாக பழந்தமிழர்கள் திரைகடல் ஓடிதிரவியம் தேடினர்.

**துணை நூற்ப் பட்டியல்**

1. பத்துப்பாட்டு, பட்டினப்பாலை சா.வே.சுப்பிரமணியன்
2. பத்துப்பாட்டு, மதுரைக்காஞ்சி சா.வே.சுப்பிரமணியன்
3. பத்துப்பாட்டு, பெரும்பானாற்றுப்படை சா.வே.சுப்பிரமணியன்
4. தமிழர் நாகதிகமும், பண்பாடும் வெ.தட்சினாமூர்த்தி
5. மதுரைக்காஞ்சி சா.வே.சுப்பிரமணியன்
6. பத்துப்பாட்டு, பட்டினப்பாலை சா.வே.சுப்பிரமணியன்
7. பத்துப்பாட்டு, பட்டினப்பாலை சா.வே.சுப்பிரமணியன்
8. பத்துப்பாட்டு, பட்டினப்பாலை சா.வே.சுப்பிரமணியன்
9. பத்துப்பாட்டு, பட்டினப்பாலை சா.வே.சுப்பிரமணியன்
10. பத்துப்பாட்டு, மதுரைக்காஞ்சி சா.வே.சுப்பிரமணியன்
11. திருக்குறள் (குறள்-90)
12. புறநானூறு சா.வே.சுப்பிரமணியன்.